## தேசிய செய்திகள்

**பண்ணை இயந்திர தொழில்நுட்பம் குறித்த உச்சி மாநாடு-2023 தொடங்கப்பட்டது.**

- **இந்த** மாநாட்டின் அறிவிப்பின் படி, மாநில அரசுகள் மூலம் டிராக்டர்கள், பவர் டில்லர்கள், தானியங்கி இயந்திரங்கள் உள்ளிட்ட 15 லட்சத்து 24 ஆயிரம் விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.
- நாட்டில் உள்ள 85 சதவீத சிறு விவசாயிகள் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்த இந்தத் திட்டம் உதவும் என்று கூறப்பட்டுள்ளது. 2014-15 முதல் 2022-23 வரை மாநிலங்களுக்கு பயிற்சி, சோதனை, CHCகள், ஹைடெக் ஹப்கள் மற்றும் பண்ணை இயந்திரங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்காக 6 ஆயிரத்து 120 கோடியே 85 ஆயிரம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது என்று மத்திய விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**கோதுமை கொள்முதலில் முதல் மூன்று மாநிலங்களின் பங்களிப்பு பட்டியல்**.

- கொள்முதலில் முக்கிய பங்களிப்பு வகிக்கும் பஞ்சாப், ஹரியானா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில் இருந்து கோதுமை முறையே 89.79 LMT, 54.26 LMT மற்றும் 49.47 LMT கொள்முதல் செய்யப்படுகிறது என்று பட்டியலிடப்பட்டுள்ளது.
- “கிராம பஞ்சாயத்து அளவில் கொள்முதல் மையங்களைத் திறக்கவும், ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட கொள்முதலுடன் கூட்டுறவு சங்கங்கள், கிராம பஞ்சாயத்துகள், போன்றவற்றின் மூலம் கொள்முதல் செய்யவும் மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் அனுமதி அளித்துள்ளது.

- **இணைய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த ராணுவம் திட்டமிட்டுள்ளது**
- **ராணுவத் தளபதிகள் மாநாடானது ஆண்டுதோறும் ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் நடைபெறும். அதன்படி, கடந்த 17-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை மாநாடு நடைபெற்றது.**
- **இம்மாநாட்டில் இணையவழி தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த முடிவெடுக்கப்பட்டது. இதன் மூலமாக நவீன ரக ட்ரோன்கள், ட்ரோன்களை எதிர்த்துத் தாக்கும் ஆயுதங்கள் உள்ளிட்டவற்றை ராணுவத்தில் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.**

- இந்தோ-இங்கிலாந்தின் அஜெயா வாரியர்-23 பயிற்சியானது தொடங்கியது.
- இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியான “அஜெயா வாரியர்-23” -ன் 7வது பயிற்சியானது இங்கிலாந்தின் சாலிஸ்பரி சமவெளியில் நடத்தப்படுகிறது.
- பட்டாலியன் மட்டத்தில் கட்டளை இடுகை பயிற்சியளித்தல் (CPX) மற்றும் நிறுவன அளவிலான களப் பயிற்சியளித்தல் (FTX) ஆகியவற்றை மேம்படுத்துவது இந்த பயிற்சியின் நோக்கமாகும்.

- வானொலி இணைப்பை அதிகரிக்க 18 மாநிலங்கள் மற்றும் 2யூனியன் பிரதேசங்களில் 91 ரேடியோ டிரான்ஸ்மிட்டர்களை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.
- "தகவல்களை சரியான நேரத்தில் பரப்புவது, விவசாயத்திற்கான வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் மகளிர் சுய உதவி குழுக்களை புதிய சந்தைகளுடன் இணைக்கும் ஆகிய ஆகச்சிறந்த பணிகளில் ஈடுபடுவதில் இந்த வானொலி டிரான்ஸ்மிட்டர்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்று பிரதமர் கூறியுள்ளார்.
- அகில இந்திய வானொலி தேசத்தை இணைக்கும் ஒரு பாலமாக செயல்படுகிறதென்றும் தொழில்நுட்பத்தின் ஜனநாயகமயமாக்கலை நோக்கி எங்கள் அரசாங்கம் தொடர்ந்து செயல்பட்டு வரும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

- இங்கிலாந்தின் முதன்மையான ரூதர்ஃபோர்ட் ஆப்பிள்டன் ஆய்வகத்தில் வசதியை மேம்படுத்துவதில் இந்தியா-பிரிட்டன் அரசாங்கம் ஒத்துழைப்பு
- ரூதர்போர்ட் ஆராய்ச்சியகம்(RAL) என்பது இங்கிலாந்தில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் கவுன்சிலால் (STFC) இயக்கப்படும் தேசிய அறிவியல் ஆய்வுக்கூடங்களில் ஒன்றாகும்.
- "இந்தியா-பிரிட்டன் நியூட்ரான் சிதறல் பட்டறை"யை ஏற்பாடு செய்வதற்கான நிதியுதவி, திட்டத்தின் முதல் ஆண்டிலிருந்து தொடங்குமென்றும் இதில் இந்தியா மற்றும் பிரிட்டன் இணைந்து செயல்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (டிஎஸ்டி), நானோ மிஷனின் கீழ் ஒரு பெரிய கூட்டுத் திட்டத்தைக் கொண்டுள்ளது என்றும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் நியூட்ரான் பற்றிய ஆராய்ச்சியை இது அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேச செய்திகள்

- இந்தோ-இங்கிலாந்தின் அஜெயா வாரியர்-23 பயிற்சியானது தொடங்கியது.
- இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியான “அஜெயா வாரியர்-23” -ன் 7வது பயிற்சியானது இங்கிலாந்தின் சாலிஸ்பரி சமவெளியில் ஏப்ரல் 27 முதல் மே 17வரை நடத்தப்படுகிறது.
- பட்டாலியன் மட்டத்தில் கட்டளை இடுகை பயிற்சியளித்தல் (CPX) மற்றும் நிறுவன அளவிலான களப் பயிற்சியளித்தல் (FTX) ஆகியவற்றை மேம்படுத்துவது இந்த பயிற்சியின் நோக்கமாகும்.

- பாகிஸ்தானில் நடைபெற்ற நம்பிக்கை இல்லா வாக்கெடுப்பில் ஷெபாஸ் ஷெரிப் வெற்றி பெற்றார்
- பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் க்கு நேற்று பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் அவரது வெளியுறவு மந்திரி பிலாவல் பூட்டோ தாக்கல் செய்த காரணத்தினால் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- இந்த வாக்கெடுப்பில் அவருக்கு ஆதரவாக மொத்தம் 336 வாக்குகளில் 180 வாக்குகளை ஷெரிப் பெற்றார். நாடாளுமன்றத்தின் தனிப்பெரும்பான்மையைப் பெற 172 வாக்குகள் வாங்கவேண்டிய நிலையில், ஷெரீப் 180 வாக்குகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.
- இதில் ஏப்ரல் 2022 அன்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் தோற்று பதவி விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாநில செய்திகள்

- ஜார்கண்ட் மாநிலமானது "முதல் ஏர் ஆம்புலன்ஸ்" சேவையை தொடங்கியுள்ளது.
- இந்த ஆம்புலன்ஸ் சேவையானது ராஞ்சி மற்றும் பிற 6 நகரங்களில் இருந்து செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது.
- எந்த மாவட்டத்திலிருந்தும் மக்களை அழைத்துச் செல்ல ராஞ்சியில் குறைந்தபட்சம் ஒரு ஏர் ஆம்புலன்ஸ் நிலையாக இருப்பதை உறுதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- **தூதரகம்(REIT) - நிர்வாக இயக்குனராக(CEO) அரவிந்த் மையா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**
- விகாஷ் கத்லோயாவிற்குப் பதிலாக, மையாஇந்த பதவி வகிப்பார் என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதி வரை விகாஷ் கத்லோயா REIT இன் மூத்த ஆலோசகராகப் பொறுப்பேற்பார் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.
- இதற்கு முன்பு அரவிந்த் மையா தலைமை நிதி அதிகாரியாக(CFO) தூதரகத்தில் பணியாற்றினார்.

## விளையாட்டு செய்திகள்

- **2023 ஆசிய U18 தடகள சாம்பியன்ஷிப்பில் இந்தியாவுக்கு தங்கம் மற்றும் வெள்ளி பதக்கம் கிடைத்துள்ளது**
- உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் 2023 ஆசிய U18 தடகள சாம்பியன்ஷிப்பின் முதல் நாளில் இந்தியா மொத்தம் நான்கு பதக்கங்களை வென்றுள்ளது, ஆண்களுக்கான 1500மீ ஓட்டத்தில் 3:57.37 வினாடிகளில் கடந்து பிரியன்ஷு தங்கம் வென்றார்.
- ஆண்களுக்கான 1500 மீ ஓட்டத்தில் 3:59.43 வினாடிகளில் கடந்து வெள்ளி பதக்கம் வென்றார் சக இந்திய வீரரான ராகுல் சர்னாலியா.

## முக்கிய தினம்

- வேலையில் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் ஆரோக்கியத்திற்கான உலக தினம் இன்று.
- உலகளவில் பாதுகாப்பானமற்றும் ஆரோக்கியமான பணிச்சூழலை உருவாக்குவதும் அதன் சமநிலையை ஊக்குவிப்பதற்காகவும் ஆண்டுதோறும் ஏப்ரல் 28 ஆம் தேதி பணி பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான உலக தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- "பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழல் ஒரு அடிப்படைக் கொள்கை மற்றும் வேலையில் சரியானது" என்பது இந்த ஆண்டுக்கான கருப்பொருளாகும்.